புராணிகர், காளத்தி

திரு. இ. தொம்பரசாமி பாண்டியர்

அவர்கள்

# அன்பளிப்பு

உ

இராமலிங்க சுவாமிகளின்

சுத்த சமரச சன்மார்க்கப் பெருநெறியின்

# திருக் குறிப்புக்கள்.


உ. வே.

அடையாறு,


இது

தொழுவூர் - வேலாயுத முதலியார் அவர்களால்

எழுதியது.

திருவொற்றியூரான் அடிமையின் நன்கொடை.


வேத மொழிபெயர்ப்புக் காரியாலயம்,

சூளை, சென்னை—வெளியீடு, நெ. 6.



MAHAMAHOPADHYAYA

Dr. U.V. SWAMINATHA IYER LIB

BESANT NAGAR, MADRAS-600 09

எவரெடி பிரஸ்,
சூளை, மதராஸ்.

# முன்னுரை.

மார்க்கமெலா மொன்றாகு மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலா நீக்கித் துணிந்துரைத்தேன்—ஏக்கம் விட்டு,
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீ ரிந்நாள்.

## அன்புடையீர் !

எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

என்பது. அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்கப் பெருமானார் அருளிச்செய்த விண்ணப்பமாம்.

இக்கருத்தே, அருட்பாவில், ஆங்காங்கு பொற்பூணில் மணிபோன்று இனிது விளங்குகின்ற தென்புது உலகமெலா

முணரும் ஆதலின் யான் இங்குக் கூறல் வேண்டுமென்பது அவசியமன்றாம்.

இனி, இராமலிங்கப் பெருமானாரின் கொள்கையானது சைவம் முதலிய மதங்களனைத்தையும உறுப்பாய்க்கொண்டதும், தத்துவங் கடந்த தனிமுதற் பொருளாகிய மைதீர் சுடரை உள்ளவாறடைந்து உய்தற்குரிய சுத்த சன்மார்க்கப் பெருநெறியையே உயிராய்க்கொண்டதுமா மென்பதை உலகிற்கு அறிவுறுத்துதற் பொருட்டே, வள்ளலார் சோதியில் மறைந்த நாளின் பெரு விழாவை முன்னிட்டு இதை வெளியிட்டனம். இது விரைவில் வெளியிட நேர்ந்தமையின பிழைகள் இருக்கலாம். உலகம் மன்னிக்கவும்.

இதற்கு, மூலப் பிரதியைக் கொடுத்துதவியவர் சுவாமிகளின் சுத்த சன்மார்க்கப் பெருநெறியை உலகில் பரவுமாறு மிக முயன்றுவரும் சுத்த சன்மார்க்க சமரச சங்கத தலைவராகிய இராசமாணிக்கம் பிள்ளை யவர்களாவர். இதன் மூலப் பிரதியோ, வடையாறு தததுவஞான சங்கத்தினரால் அச்சிட்ட பிரதியேயாம்.

மற்றும், இது சுவாமிகளின் முதன்மைச் சீடரும், உபய கலா நிதிப் புலவருமாகிய, உயர் திருவாளர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் குறித்ததாமாதலின் இராமலிங்கப் பெருந்தகையாரின் கொள்கைக்குச் சிறிதும் மாறுபடாதிருக்குமென்று கருதி வெளியிட்டனம்.

சென்னை சூளை திரு. வே. மோ. பெ. காரியாலயம்,
**காசிவாசி - சிவானந்த யதீந்திர சுவாமிகள்.**

## அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை

மாநில வரைப்பிற் பிறவிபற்பலவா மற்றவற்றரிது மாநுடமென்
றீனுல குரைக்கு மதிலுயிர்க்குறுதி யெய்துத லரிதென்ப ரெனையும்
தாவொரு பொருளா வெடுத்தினிதாண்டு தரைமிசை சுத்தசன்மார்க்க
மேனிலை வைத்த சற்குருமணியின் வியனிலை யுரைத்திடலரிதே.

தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்ற யோகி, அருட்பிரகாச வள்ளலார், என்னும், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சீடர்களுள் தொழுவூர் வேலாயுத முதலியாகிய யான் ஒருவன்.

யான், அடையாறு தத்துவஞான சங்கத்தைப்பற்றி எனது குருநாதன் எடுத்துக்காட்டிய சில வுண்மைகளை மாத்திரம் இங்கு வெளிப்படுத்த விரும்புகின்றேன.

இது, ஆங்கிலேயரும், இந்துக்களில் சிலரும், மகாத்மாக்களைப் பற்றியும், மகாத்மாக்களின் ஆக்ஞையின்படி, 'தியசாபிகல்' சங்கம் ஏற்பட்டதைப்பற்றியும், ஐயமுற்றிருப்பதை நீக்க, ஆசிரியர், இது போது அச்சிட்டுவரும் நூலில், மகாத்மாக்கள் இருக்கின்றார்களென்பதை நிரூபிக்க வேண்டி, மிகுந்த கஷ்ட மெடுத்துக்கொண்டதைக் கேள்வியுற்று, அருமியதாகும்.

மறறும், இது, ஜனங்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கைகளை அடியோடே நீக்கி 'தியசாபி' (தத்துவஞானம்) என்பது வெறும் மித்தையல்ல என்பதையும், 'தியசாபி சங்கம்' நிலையற்றதிலிருந்து ஏற்படவில்லை என்பதையும், நிரூபிக்கும் என்று நம்புகின்றேன்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

மேற்கூறிய தபசி, இராமலிங்க சுவாமிகள் அவர்களைப் பற்றியும், அவரது போதனைகளைப்பற்றியும், சுருக்கமாக முதலிற் சொல்லுகின்றேன்.

இவர், சென்னை ராசதானியில், தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்கா, 'மருதூர்' என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவர் தம் இளம்பிராயத்திலேயே சென்னைக்கு வந்து அங்கு வெகுகாலம் வசித்திருந்தார்.

இவர் தம் ஒன்பதாம் வயதிலேயே, ஆரியர்களாலும், திராவிடர்களாலும், சரிசமானமாய் அபிமானித்துவரும், அகத்தியர் முதலிய முனிவர்களால் எழுதப்பட்ட பாக்களை, ஓதாமலே மனப்பாடமாய்ப்பாடும் நாவன்மையைப் பெற்றிருந்ததாகச் சொல்லக் கேள்வி.

நான் 1849-ம் வருடம், இவரது சீடனானேன். இவர் எவ்விடமிருந்து? எவரால்? ஞானதீட்சை பெற்றார் என்பது எவருக்கும் தெரியமாட்டாது, என்றாலும், சில வருடங்களானதும், அவரை, அநேக சீடர்களடுத்துச் சூழ்ந்து கொண்டிருந்தனர். இவர், சிறந்த ஒரு எமசித்தர் இவருக்கு, மாமிசம் உண்பவர்களை மாற்றும் அற்புதசித்தி இருந்ததென்பது அநேகருக்குக் கண்கூடாம்.

இவருடைய பார்வை ஒன்றே, மாமிச உணவின் விருப்பத்தை யொழிக்கப் போதுமானதா யிருந்தது.

இவர், பிறருடைய மனதில் நிகழுபவைகளைப் பார்க்க வல்லவர். இவர், 1855-ம் ஆண்டில் சென்னையை விட்டுச் சிதம்பரத்திற்குப் போனார். அங்கிருந்து வடலூர், கருங்குழி என்ற இடங்களுக்குச் சென்று, அங்கு அநேக காலமிருந்தார்.

அங்கிருக்கும்போது, இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்குச் சென்றாரென்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகு நாள் மறைந்திருப்பார்.

இவர், உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர், மெலிந்த சரீரமுடையவர், எலும்புகள் தெரியும், ஆயினும் வீரியபலமுள்ளவர், நிமிர்ந்த திரேகம், தெளிந்த மாநிற மேனியர், நீண்ட மெலிவிய நாசி யுடையவர், பரந்த பொறி பறக்குங் கண்களை யுடையவர், இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது.

இவர், கடைசிக் காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார்.

இவர், யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையைத் தரித்தார். (செருப்பு)

இவருடைய உடை, இரண்டு வெள்ளை யாடையைவிட வேறில்லை. இவர் கடும் நிராகாரத் தபசிபோலிருந்தார். இவர் இளைப்பாறினதாக எவரு மறியமாட்டார். இரண்டு, அல்லது மூன்று நாளைக் கொருமுறை யுணபர். அப்போது சில கவளத்தோடு திருப்தி யடைவர். இரண்டு மூன்றுமாத காலம் வரை உபவாசவிரதம் எடுப்பர். அப்போது, கொஞ்சம் சர்க்கரை கலந்த பானத்தைத் தவிர வேறொன்றும் உட்கொள்ளார்.

இவர், சாதி வேற்றுமை பாராட்டலாகாது என்று போதித்தால், சனங்கள் அதில் பிரியப்பட்டார்களிலர். எனினும், பல சாதியாரும் இவரைச் சுற்றிப் பெருங் கூட்டமாய்க்

கூடினர். அவர்கள் இவருடைய போதனைக்காக வந்திலர்கள். ஆயினும், இவர் அற்புத சித்திகளைப் பெற்றவர் என்று கேள்வியுற்று, அவ் வற்புதங்களைப் பார்க்க வந்தவர்களாவர். இவர், அவர்களுக்கு அவ்விதமானது ஒன்றும் இல்லையென்றும், (எமது கொள்கை) சுத்தமான, தத்துவ சாத்திர யுக்தமான சமயமென்றும் (சுத்த சன்மார்க்கமென்றும்) அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவர்.

அங்கு இவர் செய்த போதனைகளில் சில வருமாறு :—

(1) நான் கொடுத்த போதனைகளை, இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும் வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப்படுத்துவார்கள். அந்நிய நாட்டார், அவைகளைச் சந்தோஷத்துடன ஏற்றுக்கொள்ளுவார்கள்.

(2) தற்போது, உலகில் மேலிட்டிருக்கும் கலி புருடனின் விபத்துக்கேதுவான செல்வாக்கு, இனி பத்து வருடத்திற்குள் அடங்கிப்போகும்.

(3) மாமிசம் உண்ணும் வழக்கம் நாளாவட்டத்தில் விட்டுப்போகும்.

(4) சாதி, வமிச முதலியவைகளால் ஏற்படும் வேற்றுமையானது அடைவினில் நீங்கிப்போய், அகிலமாம், சகோதரத்துவத்தின் மூலக்கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டு, இந்தியாவில் 'சகோதர அறம்' நிலை நாட்டப் பெறும்.

(5) உண்மையில், 'கடவுள்' எனப்படுவது 'அகில மாம் அன்பாம்' அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும், சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.

(6) ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கி யிருக்கும் தெய்வீக சக்தியை, மானிடர்கள் தெரிந்துகொண்டதும், இயற்கைச் சத்திகளை மாற்றக்கூடிய அற்புத வல்லமைகளைப் பெறுவார்கள் என்பதாம்.

1867-ம் ஆண்டில், இவர், 'சமரச வேத சுத்த சன்மார்க்கம்' என்னும் ஒரு இயக்கத்தை யுண்டாக்கினார். அகிலமாம், சகோதரத்வ மூலக்கருத்தை உலகில் நிலைநாட்டி, வேதத்தின் சத்திய போதனைகளைப் பரவச் செய்யும் சங்கம் என்பது அதன் கருத்து. இஃது, தியாசபி (தத்துவஞான) சங்கத்தின் கருதமோடும் ஒத்திருக்கின்றது, என்று நான் சொல்ல வேண்டியது அவசியமில்லை.

எமது 'சமரச சன்மார்க்க சங்கம்' ஐந்தாறு வருடந்தான் இருந்தது. அதுபோது, அநேக ஏழைகளுக்கும், தேகந் தளர்ந்த பலவீனர்களுக்கும் அன்னம், ஆகாரம் அளிக்கப்பட்டு வந்தது.

இவர், ஐம்பத்து நான்காவது வயதை யடைந்தபோது, தாம், உலகைவிட்டுப் போவதாகச் சொல்லி, சீடர்களுடைய மனதை, ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். சமாதியி லிருக்கப்போவதாக, தமது விருப்பைக் காட்டினார். இவர், 1873-ம் ஆண்டில் ஆறுமாத காலமாக மன்பதை யுலகுக்குள்ள சகோதர ஒற்றுமையைப்பற்றி வெகு விமரிசையாகப் போதித்தார்.

பின்னர், அவ்வாண்டுக் கடைசியில், மூன்று மாதமாய் பிரசங்கஞ் செய்வதை முற்றும் நிறுத்திவிட்டு மௌனமாயிருந்தார்.

1874-ம் ஆண்டில், ஜனவரி மாதக்கடைசியில் பேசத் தொடங்கி, இனி நடக்கப்போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார்.

1874-ம் ஸ்ரீ ஜனவரிமீ 30உ அவருடைய தரிசனம் கடைசியாகக் கிடைத்தது.

பிறகு இவர், சிறிய குடிசையைத் தயாரிக்கச் செய்து, தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி, அக் குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார்.

அவருடைய உத்தரவின்படி அதன் கதவு பூட்டப்பட்டது, வாயற்படியும் சுவரால் மூடப்பட்டது.

பின்னர், ஒரு வருடத்திற்குப் பிறகு, கதவைத்திறந்து பரிசோதித்ததில், அவ் வறை வெறும் அறையாயிருந்தது.

அவர், மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னாரே தவிர, வருங்காலம், சந்தர்ப்பம், என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை.

அதுவரையில், தாம், இந்தியாவில் மாத்திரமல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய நாடுகளிலும் உலகமுன்னேற்றத்தைக் குறித்து, வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

இது, ஆயிரக்கணக்கான சனங்களுக்கும் தெரிந்ததேயாம்.

இது இவருடைய சரித்திரத்தின் மிகச்சுருக்கமாம்.

இனி, அவர், இந்து சரித்திரங்களிலுள்ள நல்லொழுக்கக் கருத்துக்களைப் பிரசங்கிப்பதிலும், அகிலமாம், சகோதர ஐக்கிய ஒற்றுமை, இரக்கம், தயாளம் முதலியவைகளின் கருத்தை, சனங்களின் மனதில் தைக்கும்படி செய்வதிலும் ஊக்கமாயிருந்தார் என்றாலும்; அவர் கொடுத்த உந்நத, நல்லொழுக்கங்களை மதித்து, அபிமானித்தவர்கள் வெகு சிலரேயாவர் இதைப்பற்றிக் கடைசிக்காலத்தில் விசனமுற்று அடிக்கடி அவர் சொன்னதாவது :—

அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச்சங்கத்தில் அங்கத்தினராக வர நீங்கள் அருகரல்லர், இந்தச் சங்கத்தின் உண்மை யங்கத்தினர், இந்தியாவிற்கு வடக்கே வெகு தூரத்தில் வசிக்கின்றார்.

நீங்கள் நான் சொல்வதைக்கேட்பதில்லை, எனது போதனையின் கருத்தின்படி நடக்கவுமில்லை, நான் சொல்வதைக் கவனிக்கமாட்டோம் என்று திடப்படுத்திக் கொண்டீர்கள் போலும், என்றாலும், காலம் நெருங்கிவிட்டது, ரிஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவாளிகள் இந்தியாவிற்கு வந்து, இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப்பார்கள்.

நான் இப்போது உங்களுக்கு, வீணில் சொல்லும், சிறந்த உண்மைகளை, அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள், வடக்கே வெகுதூரத்தில் வசிக்கும்

அம்பல சகோதரர்கள், இந்தியாவில், அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக்கூடாத நன்மைகளை விளைவிப்பதை, சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள் என்பதாம்.

இவர், ஞானதிருஷ்டியில் கண்டு சொன்ன விஷயங்கள் யாவும் தவறாமல் நிறைவேறின.

மகாத்மாக்கள் வடக்கே இருக்கின்றார்களென்பது இந்துக்களுக்கு நவீனக்கருத்தல்ல, ரிஷியாவிலிருந்து, 'பிளாவட்ஸ்கி' என்பவரும், அமெரிக்காவிலிருந்து, 'கர்னல் ஆல்காட்' என்பவரும் வருவதைப்பற்றி பல வருடங்களுக்கு முன்னரே அற்புதச் செய்தியாக வெளிப்படுத்தியதேயாம்.

இந்த, தியாசிபிகல் சுசைட்டி, எவர்களுடைய ஆக்கினையின்படி ஏற்படுத்தப்பட்டதோ, அம் மகாத்மாக்களுடன், எனது குருவும் சேர்ந்தவரென்று எதிர்க்கமுடியாத அத்தாட்சியாக இருக்கின்றது. இதில், பல சான்றுகளிருக்கின்றன.

சித்தசன்மார்க்க சமரசக் கோள்கைக்குறிப்பு

முற்றிற்று.

---

அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை.

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல்